**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 194/2004**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. Kokilavani, Junior Assistant, of this court, on 12.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செங்கோடன் Father's Name : ராமசாமி கவுண்டர்

துவக்க நேரம் : 12.34 P.M

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு 2-ஆம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் இவ்வழக்கில் 3-ஆம் வாதி என்றால் சரிதான். 1-ஆம் வாதி எனது தாயார் என்றால் சரிதான். 2-ஆம் வாதி இளையப்பன் எனது மூத்த சகோதரர் என்றால் சரிதான். எனது தந்தை பெயர் ராமசாமி கவுண்டர் என்றால் சரிதான். 1-ஆம் பிரதிவாதி கைலப்ப கவுண்டர் எனது பெரியப்பா என்றால் சரிதான். எனது பாட்டனார் இளையப்ப கவுண்டருக்கு எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்றால் 7 ஏக். 60 செண்ட் பட்டா நிலமும், 1 ஏக்.80 செண்ட் நிலம் அரசு புறம்போக்கு நிலமும் பாத்தியமாக இருந்தது. தற்பொழுது எனது பெரியப்பா மகன் மேற்படி புறம்போக்கு நிலத்திற்கு பட்டா பெற்றுக் கொண்டார்.

2. எனது தாத்தா, எனது அப்பா மற்றும் பெரியப்பா ஆகியோர்களுக்கு இடையே எந்த ஆண்டு பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் கடந்த 1950-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. எனது தாத்தா இளையப்ப கவுண்டர் எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை, நான் அப்பொழுது பிறக்கவில்லை, அதேபோல் எனது பாட்டியும் நான் பிறக்கும் முன்பே காலமாகிவிட்டார். மேற்படி பாகப்பிரிவினையின்பொழுது யார்யாருக்கு எவ்வளவு நிலம்

ஒதுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், எனது பெரியப்பாவிற்கு 3 ஏக்கரும், எனது அப்பாவிற்கு 2.60 ஏக்கரும், தாத்தாவிற்கு 2 ஏக்கரும் பாகமாக ஒதுக்கப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, எனக்கு எழுதப்படிக்க தெரியாது.

3. எனது தாத்தாவிற்கும், எனது பெரியப்பாவிற்கும் இடையே மனஸ்தாபம் இருந்து வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது பாட்டனார், எனது பெரியப்பாவிற்கு கடந்த 1962-ல் எழுதிக் கொடுத்த கிரயம் சரியா தவறா என்றால் தவறு. கடந்த 1982-ல் எனது தாயார் செல்லம்மாள், கைலப்ப கவுண்டரிடம் ஒரு பாகம் சொத்து கிரயம் பெற்ற பொழுது 1962-ஆம் ஆண்டு பத்திரம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. நானும், எனது சகோதரர் இளையப்பனும் கடந்த 2003-ஆம் ஆண்டு ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடந்த 2003-ஆம் ஆண்டு நானும், எனது சகோதரர் இளையப்பனும் எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கிரய ஆவணத்தின்படி C பாக அட்டவணை சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். A பாகம் எனது அம்மாவிற்கும், B பாகம் எனது சகோதரர் இளையப்பனுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. எனது தாயாருக்கு ஒதுக்கப்பட்ட A பாக சொத்தை எனது சகோதரர் இளையப்பனுக்கு, எனது தாயார் 05.05.2003-ஆம் தேதியன்று ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான், மேற்படி ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
Typed by Tmt. L.Kalaiselvi- O.S. No.194/2004 , Dt. 12.01.2026.

(மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கும், ஆவண சொத்திற்கும் தொடர்பில்லை என்று 3-ஆம் வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது)

6. மேற்படி கிரய ஆவணத்தின்படி எனக்கு ஒதுக்கப்பட்ட C அட்டவணை சொத்தை எனது மனைவிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி C அட்டவணை சொத்திற்குண்டான வருவாய் ஆவணங்களை எனது பெயருக்கு மாற்றிக் கொண்டேன் என்றால் சரிதான். 2003 பாகப்பிரிவினை பத்திரத்தின் படி துலுக்கனூர் கிராமத்தில் உள்ள சொத்தில் எனக்கு பாகம் ஒதுக்கப்படாததால் தாவா சொத்தில் எனக்கு எந்த பாகமும் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல.

**<u>3-ஆம் வாதி தரப்பு மறு விசாரணை</u>**

7. எனது தாத்தா, பெரியப்பா, எங்கள் குடும்பத்திற்கு துலுக்கனூர் கிராமத்தில் பாகம் ஒதுக்கப்பட்டதா என்றால் ஆமாம், மேற்படி பாகத்தை யாருக்கு ஒதுக்கினார்கள் என்றால் எனது சகோதரர் இளையப்பனுக்கு ஒதுக்கப்பட்டது. தற்பொழுது நாங்கள் எந்த சொத்திற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் எங்கள் தாத்தா சொத்திற்காக தாக்கல் செய்துள்ளோம்.

முடிவு நேரம்: 01.06 P.M

| |
|---|
| Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct<br><br>Sd/-D.JansiRani,<br>Additional District Munsif, Attur |

Typed by Tmt. L.Kalaiselvi- O.S. No.194/2004 , Dt. 12.01.2026.